# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## முதலாம் தவணை – 2020
## தரம்10 – பகுதி 1
### வணிகக்கல்வியும் கணக்கீடும்
### பயிற்சி வினாக்கள்

பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 4 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தனியார் போக்குவரத்து தேவையை நிறைவு செய்யும் பிரசித்தமான நிறுவனமான ''தீபா ரவல்ஸ்'' நிறுவனத்தில் பல ஆண்டுகள் சேவை செய்த ''சானுகா'' அங்கிருந்து விலகி ''சானு ரவல்ஸ்'' எனும் பெயரில் தனியார் போக்குவரத்து சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தார். அதிவேக வீதிகள் உருவாக்கியமை, வீதிகள் விஸ்தரிக்கப்பட்டமை என்பன தன்னுடைய வணிகத்திற்கு இலகுவாக இருப்பதுடன் ஒவ்வொரு ஆண்டும் ஆரம்ப மாதங்களில் கல்விச் சுற்றுலா செல்வதற்காக பஸ் வண்டிகளுக்கு அதிகரித்த தேவை கானப்படுவதாகவும் அவள் கூறினார்''

01. சம்பவத்தில் குறிப்பிடப்படும் ''சானு ரவல்ஸ்'' நிறுவனத்தினால் நிறைவு செய்யப்படும் தேவை மற்றும் விருப்பத்தை முறையாக காட்டும் விடையானது.
    1) மகிழ்ச்சி - சுற்றுலா
    2) சுகாதாரம் - மகிழ்ச்சி
    3) போக்குவரத்து - சுற்றுலா
    4) சுற்றுலா - போக்குவரத்து

02. ''சானு ரவல்ஸ்'' நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர் இருவர்,
    1) "தீபா ரவல்ஸ்'' நிறுவனம் மற்றும் பாடசாலை மாணவர்கள்
    2) ''கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள்
    3) தொழிலாளர்கள் மற்றும் வங்கி
    4) வங்கி மற்றும் அரசு

03. சானுகாவின் வணிகத்தின் பலம் மற்றும் வாய்ப்பு என்பவற்றை முறையே காட்டும் விடையாக அமைவது,
    1) சானுகா ''தீபா ரவல்ஸ்'' நிறுவனத்தில் வேலை செய்தமை மற்றும் அதிவேக வீதிகள் உருவாக்கப்பட்டமை
    2) பாதைகள் விஸ்தரிக்கப்பட்டமை மற்றும் வண்டிகளுக்கு காணப்படும் அதிகளவான தேவை.
    3) சானுகாவிடம் போதியளவான மூலதனம் மற்றும் அவரிடம் காணப்படும் வியாபாரத் திறமை.
    4) பாடசாலை கல்வி சுற்றுலா மற்றும் சானுகாவின் அர்ப்பணிப்பு.

04. ''சானு ரவல்ஸ்''நிறுவனத்திடம் காணப்படும் வாகனம் உள்ளடங்கும் உற்பத்திக்காரணி
    1) நிலம்
    2) மூலதனம்
    3) உழைப்பு
    4) முயற்சி

05. மனித தேவைகள் தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எது சரியானது.
    1) அனைத்து சமூகங்களிற்கும் பொதுவானவை
    2) இரண்டாம் நிலையானது
    3) பல்வகையானவை
    4) வரையறுக்கப்படாதவை

06. ‘அ’ பகுதியில் தேவைகள் சிலவும் ‘ஆ’ பகுதியில் விருப்பங்கள் சிலவும் தரப்பட்டுள்ளது.

| அ | ஆ |
|---|---|
| 1. உணவு | A. மாடி வீடு |
| 2. உடை | B. பாண் |
| 3. வீடு | C. தொலைபேசி |
| 4. தொடர்பாடல் | D. தொப்பி |

‘அ’ பகுதியில் உள்ளவற்றில் இருந்து ‘ஆ’ பகுதியில் பொருத்தமானதை தெரிவு செய்க.

1) 1A, 2D, 3C, 4B　　3) 1B, 2D, 3C, 4A
2) 1B, 2D, 3A, 4C　　4) 1B, 2C, 3A, 4B

07. கீழ்வருவன வணிகமொன்றின் நோக்கங்கள் சில

A. பொருட்கள் சேவைகளின் தரத்தை உயர்த்துதல்
B. தொழில் வாய்ப்பை உருவாக்கல்
C. இலாபம் உழைத்தல்
D. நுகர்வோர் திருப்தியை உயர்வடையச் செய்தல்

மேற்குறிப்பிட்ட வணிக நோக்கங்களில் பொதுவாகக் காணப்படக் கூடிய வணிக நோக்கம்

1) A யும், C யும்　　3) C யும், D யும்
2) B யும், A யும்　　4) D யும், A யும்

08. வணிகமொன்றின் அக்கறை கொள்ளும் கட்சியினர் வணிகத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்த்திருக்கும் நோக்கங்கள் சில

A. ஈடுபடுத்திய மூலதனத்தை பாதுகாத்தல்
B. தொழிற் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
C. தொடர்ச்சியாக பொருட்களுக்கான கட்டளையைப் பெறல்
D. எதிர்காலத்தில் வணிக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
E. தேசிய உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளல்

மேற்குறிப்பட்ட நோக்கங்களுள் உரிமையாளர் வணிகத்தின் மூலம் எதிர்பார்க்கும் நோக்கம் இரண்டு

1) B யும், E யும்　　3) C யும், D யும்
2) A யும், B யும்　　4) A யும், D யும்

09. பின்வரும் வணிகங்களில் சேவை உற்பத்தி வணிகங்களை உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவு செய்க.

1) மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
2) மொத்த சில்லறை வியாபார நிறுவனங்கள், வங்கிகள், அழகுக் கலை நிலையங்கள்
3) டயர் உற்பத்தி, பாண் உற்பத்தி, ஆடை உற்பத்தி
4) தபால் நிலையம், வாகனம் திருத்துமிடம், பாண் உற்பத்தி

10. தேவை, விருப்பம் தொடர்பாக சரியான கூற்றினைத் தெரிவு செய்க

1) தேவைகள் வரையறையற்றவை, விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை.
2) தேவைகளை தோற்றுவிக்க முடியும், விருப்பங்களை தேற்றுவிக்கமுடியாது.
3) தேவைகள் அத்தியாவசியமானவை, விருப்பங்கள் அத்தியாவசியமற்றவை.
4) தேவைகள் பல்வகைப்பட்டது, விருப்பங்கள் பொதுத்தன்மை கொண்டவை.

11. விருப்பம் ஒன்றின் பண்பாகக் கருதப்படக் கூடியது,

**1)** தோற்றுவிக்கக் கூடியது　　3) அத்தியாவசியமானது
**2)** வரையறுக்கப்பட்டது　　4) அனைவருக்கும் பொதுவானவை

12. வணிகமொன்றில் வணிகத்திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தல், சரியான தீர்மானமெடுத்தலை மேற்கொள்ளும் அக்கறை கொள்ளும் தரப்பினர் ……………………… ஆவார்.

1) உரிமையாளர் 3) ஊழியர்
2) முகாமையாளர் 4) வழங்குநர்

13. பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களுக்கு தேவையான வளங்கள் ……………………. எனப்படும்.
    1) பௌதீகவளம் 3) மூலதனம்
    2) உற்பத்திக் காரணிகள் 4) மேற்கூறிய எவையுமல்ல

14. வெதுப்பக உற்பத்தி நிறுவனமொன்றில் உள உழைப்பை வழங்கக் கூடிய ஊழியராகக் கருதப்படக் கூடியவர்,
    1) வெதுப்பக முகாமையாளர் 3) வெதுப்பக உரிமையாளர்
    2) வெதுப்பக உற்பத்திகளை தயாரிக்கும் தொழிலாளி 4) மேற் கூறிய யாவும் சரி

15. வணிகங்கள் நிலைத்திருப்பதற்கான அடிப்படைக் காரணி பின்வருவனவற்றுள் எது?
    1) இலாபமீட்டுதல்
    2) பரிமாற்றமும் கொடுக்கல் வாங்கலும்
    3) சிறந்த தலைமைத்துவமும் சிறநத் முகாமைத்துவமும்
    4) மனிதத் தேவைகளும் விருப்பங்களும்

16. வணிகமொன்றின் புறச் சூழல் காரணிகளில் உள்ளடங்காத சூழல் காரணிகளின் தொகுதியை தெரிவு செய்க.
    1) வாடிக்கையாளர், வழங்குநர், அரசியல் சூழல்
    2) உரிமையாளர், முகாமையாளர்கள், ஊழியர்கள்
    3) அரசியல் சூழல், சட்டச் சூழல், பொருளாதாரச் சூழல்
    4) பொருளாதாரச் சூழல், தொழில்நுட்பச் சூழல், பூகோளமயச் சூழல்

17. வணிகச் சூழலினை ஆராய்வதினூடாக கிடைக்கப் பெறும் அனுகூலங்களும் அவற்றிற்கான உதாரணங்களும் பின்வருமாறு உமக்குத் தரப்படுகின்றன.

| அனுகூலங்கள் | உதாரணங்கள் |
| --- | --- |
| 1. பலம் | a. அனுபவமுள்ள முகாமையாளர் |
| 2. பலவீனம் | b. புதிய சந்தைகள் |
| 3. வாய்ப்புக்கள் | c. நிதிப் பற்றாக்குறை |
| 4. அச்சுறுத்தல்கள் | d. அரசின் ஊக்குவிப்பு இல்லாதிருத்தல் |

மேற்படி ஒவ்வொரு அனுகூலத்திற்குமான பொருத்தமான உதாரணத்தைக் கொண்டமைந்த விடையினைத் தெரிவு செய்க.
    1) a, b, c, d 2) d, c, b, a
    3) a, c, b , d 4) a, d, c , d

18. பின்வருவனவற்றிலிருந்து பொருளாதாரச் சூழல் காரணிகளைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.
    1) வட்டி, தேசிய வருமானம், விலைமட்டம்
    2) திறந்த பொருளாதாரம், சர்வதேச ஒப்பந்தம்
    3) விழுமியம், நம்பிக்கை, உடை, பாவனை
    4) வயது, பால் , சமயம், இனம்.

19. வணிகச் சூழலில் அகச் சூழலாக கருதப்படக் கூடியது,
    1) வழங்குநர் 3) வாடிக்கையாளர்கள்
    2) போட்டியாளர்கள் 4) முகாமையாளர்கள்

20. வட்டிவீதம், பணவீக்கம், நிறைதொழில்மட்டம், சேமிப்புக்கள் என்பவை உள்ளடங்கும் சூழல்
   1) அரசியல் சூழல்   3) தொழில்நுட்பச் சூழல்
   2) பொருளாதாரச் சூழல்   4) பூகோளமயச் சூழல்

21. வணிகமொன்றின் புறச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்துகொள்ளக் கூடியது,
   1) பலம், பலவீனம்   3) பலம், வாய்ப்பு
   2) வாய்ப்பு, அச்சுறுத்தல்   4) பலவீனம், அச்சுறுத்தல்

22. பின்வருவனவற்றுள் ஒரு வணிகத்தின் வாய்ப்பினை மட்டும் காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க.
   1) போட்டியாளர் உள்வருகை
   2) பணியாட்கள் விசேடமான திறன்கள், அர்ப்பணிப்புடன் காணப்படல்
   3) வணிகத்திற்கு அரசாங்கத்தின் வரிச் சலுகைகள் கிடைத்தல்
   4) புதிய உற்பத்தி முறைகளை வணிகம் அறிமுகம் செய்தல்

23. வணிகமொன்றின் அகச் சூழல் ஆய்வின் மூலம் …………….. இனையும், …………….. இனையும் கண்டு கொள்ளமுடியும்.
   1) பலம், வாய்ப்பு   3) பலம், பலவீனம்
   2) வாய்ப்பு, அச்சுறுத்தல்   4) பலவீனம், அச்சுறுத்தல்

24. 'வணிகமொன்றிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் இருத்தல் வணிக முன்னேற்றத்திற்கு சிறப்பாக அமையும்' ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் வணிகத்தின்?
   1) சந்தர்ப்பமாகும்
   2) பலமாகும்
   3) அச்சுறுத்தலாகும்
   4) பலவீனமாகும்

25. அரசினது நிலைப்புத்தன்மை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மற்றும் வரவு செலவுத் திட்டக் கொள்கைகள், தொழிலாளர் கொள்கைகள் என்பன வணிகமொன்றின் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் காரணியாகக் கருதக் கூடியது.
   1) பொருளாதாரச் சூழல்   3) பூகோளமயச் சூழல்
   2) சட்டச் சூழல்   4) அரசியல் சூழல்

26. நிரல் 'அ' ஆனது குறிப்பிட்ட சில நாடுகளையும், நிரல் 'ஆ' ஆனது அந்நாடுகளில் பரிமாற்றப்படும் நாணய அலகுகளையும் குறிப்பிடுகின்றது.

| அ | ஆ |
|---|---|
| A. அமெரிக்கா | 1. யென் |
| B. யப்பான் | 2. றிங்கிற் |
| C. பிரித்தானியா | 3. டொலர் |
| D. மலேசியா | 4. பவுண்ஸ் |

   'அ' 'ஆ' விற்கு இடையிலான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
   1) A-3, B-2, C-1, D-4   3) A-3, B-1, C-4, D-2
   2) A-2, B-1, C-4, D-3   4) A-4, B-3, C-2, D-1

27. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வங்கி வட்டியானது 2% த்தினால் அதிகரிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வணிகங்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.
   1) வணிகம் கடன் எடுப்பதற்கு ஊக்குவிக்கப்படும்.
   2) வணிகங்கள் வைப்பிலிடும் பணத்தின் அளவைக் குறைக்கும்.
   3) வணிகமானது கடன் எடுப்பதை மட்டுப்படுத்தும்.
   4) பண்டங்கள் சேவைகளின் விற்பனை விலை உயர்வடையும்.

28. சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1) பலம்:- நுகர்வோரின் வாழ்க்கைப் பாங்கு மாற்றமடைதல்
   2) பலவீனம்:- போட்டியாளர்கள் உருவாகுதல்
   3) வாய்ப்பு:- புதிய நகரங்கள் உருவாக்கப்படல்
   4) அச்சுறுத்தல்:- பணியாளர்களின் எதிர்மறை மனப்பாங்கு

29. வணிகச் சூழல் தொடர்பாக கீழே தரப்படும் கூற்றானது வணிகமொன்றின் எத்தகைய சூழல் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்?
   “சர்வதேச ரீதியில் பிரசித்தமடைந்த நிறுவனங்களின் பண்டங்கள், சேவைகள் உள்நாட்டுச் சந்தைக்கு வருவதனால் உள்நாட்டு வணிகம் விருத்தியடையும் அதே வேளை உள்நாட்டு ரீதியில் செயற்படும் உள்நாட்டு நிறவனங்களின் நிலைப்புத்தன்மை நெருக்கடிக்குள்ளாகின்றன”
   1) பூகோளமயச் சூழல்   3) தொழில்நுட்பச் சூழல்
   2) பொருளாதாரச் சூழல்   4) சட்டச் சூழல
   .

30. கீழே காட்டப்பட்டுள்ள வணிக அமைப்புக்களை இலாப நோக்கமுடைய வணிக அமைப்புக்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிக.
   A - கூட்டிணைக்கப்பட்ட கம்பனி   B– அரச கூட்டுத்தாபனம்
   C– தனியுடமை   D– பங்குடமை   E– அரச திணைக்களம்
   1) A,D,E   2) A,B,C   3) A,C,D   4) B,C,E

31. பங்குடமையொன்றின் இருக்கக்கூடிய ஆகக் கூடிய பங்காளரின் எண்ணிக்கையை வரையறுக்கும் சட்டம்.
   1) 1890 ஆம் பங்குடமைச் சட்டம்   2) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனி சட்டம்
   3) மோசடி தவிர்ப்பு கட்டளைச் சட்டம்   4) 1972 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம்

32. ‘‘விமலா ஸ்டோர்ஸ்’’வியாபாரத்தின் பெயரை பதிவு செய்வது கட்டாயமானதாகும் என உரிமையாளர் விமலேஸ்வரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கான காரணமாக அமைவது.
1) வியாபாரத்திற்கான சட்ட அந்தஸ்தை பெற்றுக்கொள்ள.
2) அரசினால் வழங்கபப்டும் உதவிகளை பெற்றுக்கொள்ள.
3) உரிமையாளரின் முழுப்பெயரில் அல்லாமல் வேறு பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்லல்.
4) அவருடைய பெயருக்கு சமனான பெயரில் வணிகத்தை நடாத்திச்செல்லல்.

33. பின்வரும் வணிக அமைப்புகளில் இலாப நோக்குள்ள வணிக அமைப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
   1) தனியாள் உரிமை, பங்குடைமை, அரச கூட்டுத்தாபனம்
   2) கூட்டுறவுச் சங்கங்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்
   3) தனியாள் உரிமை, பங்குடைமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   4) அரச கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச திணைக்களங்கள்

34. வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகள் சில கீழே தரப்படுகின்றன. இவற்றுள் அளவு ரீதியான நியதியாக கருதப்பட முடியாதது எது?
   1) வணிகத்தரின் மூலதன அளவு
   2) ஊழியர்களின் எண்ணிக்கை
   3) பயன்படுத்தும் வலுவின் அளவு
   4) ஊழியர் வினைத்திறன்

35. பின்வருவனவற்றுள் தனியுடைமை வணிகம் தொடர்பாகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாமையினால் நட்டம் பலரினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வணிகம் ஆகும்.

2) பொது மக்களுக்குப் பங்குகளை வழங்கி மூலதனத்தைத் திரட்டும் வணிகம்
3) இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதும் நாடுபூராகவும் பரந்து காணப்படக் கூடியதாகவுள்ள வணிகம்
4) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும் பொதுமக்களுக்கு பங்குளை வழங்கமுடியாததுமான வணிகம்

36. பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கும் சட்டம்,
1) 1918ம் ஆண்டு 06ம் இலக்க வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம்
2) 1972ம் ஆண்டு 05ம் இலக்க கூட்டுறவுச் சட்டம்
3) 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்
4) 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம்

37. சட்ட ரீதியாக தனி மனித அந்தஸ்த்து உடையதும், பங்குகளை வெளியிட்டு மூலதனத்தை திரட்டக் கூடியதும், பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதுமான வணிக அமைப்பு,
1) கூட்டுறவுச் சங்கங்கள்
2) அரச கூட்டுத்தாபனங்கள்
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4) அரச திணைக்களங்கள்

38. கூட்டுறவு அமைப்பில் காணப்படக் கூடிய விஷேட பண்புகளாக கருதப்பட முடியாதது,
1) இலாபமும், உரிமையும் அதிகமானவர்களிடையே பகிரப்படல்
2) ஜனநாயக நிருவாகம் நடைபெறுகின்றமை
3) சுயமான திறந்த அங்கத்துவம்
4) அங்கத்தவர்களுக்கு சமமான உரிமை

39. கேசவன் என்பவர் தனித்தீர்மானம் எடுப்பதில் ஆர்வம் கொண்டவராகவும், எந்தவொரு இடரையும் தனித்து பொறுப்பேற்கும் சக்தியுடையவராகவும் காணப்படுகின்றாராயின் அவர் பின்வரும் வணிக அமைப்பில் எவ் வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும்.
1) பங்குடமை வணிகம்
2) தனியுடமை வணிகம்
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4) கூட்டுறவுச் சங்கங்கள்

40. இலங்கையில் கம்பனியைக் கூட்டிணைப்பதற்குப் பொருத்தமான சட்டம் பினவ்ருவனவற்றுள் எது?
1) 1918ம் ஆண்டு 6 ஆம் இலக்கப் வணிகப்பெயரப் பதிவு கட்டளைச் சட்டம்
2) 1982ம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச்சட்டம்
3) 2007ம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டம்
4) பாராளுமன்ற விசேட சட்டம்

41. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பொது அல்லது விஷேட சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் வணிக அமைப்பு,
1) அரச கூட்டுத்தாபனம்
2) அரச திணைக்களங்கள்
3) அரச கம்பனிகள்
4) கூட்டுறவுச் சங்கங்கள்

42. இலாப நோக்குள்ள பொதுத்துறை வணிகமாகக் கருதப்படக் கூடியது,
**1)** அரச கம்பனி
**2)** கூட்டுறவு
3) பங்குடைமை
4) சங்கவகை நிறுவனங்கள்

43. பின்வருவன பல்வேறு வகையான வணிகங்களின் சில குணவியல்புகள் ஆகும்.

**A.** இலாப நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்

**B.** நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது

**C.** நட்டப்பொறுப்பு பரவாலாக்கப்பட்டிருத்தல்

**D.** சட்டஆளுமை காணப்படல்

**E.** சுதந்திரமான தீர்மானமெடுத்தல்

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்குரிய குணவியல்புகளைக் கொண்ட விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, E 2) C, E 3) B, E 4) B. D

44. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தில் காணப்படும் பங்குடைமை சம்பந்தமான ஒரு விடயமாகக் கருதப்படக் கூடியது.

**1)** பங்குடைமைக்கான பதிவு
**2)** பங்காளர் உச்ச எண்ணிக்கை
3) பங்குடைமை கலைப்பு
4) பங்காளர் மூலதனம்

45. அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் விசேட பண்பாகக் கருதப்பட முடியாதது,

**1)** தனிமனித அந்தஸ்து இல்லாதிருத்தல்
**2)** உரிமை, நிருவாகம் அரசிற்குரியது
**3)** தொடர்ந்தியங்கும் தன்மையிருத்தல்
**4)** விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுவது

46. ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்படும் தனியார்துறை வணிக அமைப்பு எது?

**1)** அங்கீகார வணிகம்
**2)** தனியுடைமை வணிகம்
3) கூட்டுறவுச் சங்கங்கள்
4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

47. பொதுத்துறையைச் சேர்ந்த முழுமையாக சேவை நோக்கம் கொண்ட, சட்ட ஆளுமையற்ற அமைப்பிற்கு சிறந்த உதாரணமாக அமைவது,

1) அரச திணைக்களம்
2) அரச கூட்டுத்தாபனம்
3) அரச கம்பனிகள்
4) கூட்டுறவு வணிகம்

48. தனியுடைமை வணிகம் தொடர்பான **பிழையான** கூற்றாக அமைவது,

1) இலாபம் முழுவதும் தனி ஒருவரே அனுபவிக்கலாம்
2) சட்ட ஆளுமை இல்லை
3) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது
4) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாதது

49. 'கமலன் அன்ட் விமலன் சகோதரர்கள்' என்னும் வணிகம் எவ்வியாபார அமைப்பைச் சேர்ந்தது,

1) தனியுடைமை
2) பங்குடைமை
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4) கூட்டுறவு வணிகம்

50. சட்டத்தின்படி பதிவு கட்டாயமாக்கப்படாத நிறுவனங்களைக் கொண்ட தொகுதியாக அமைவது,

1) தனியுடைமை, கூட்டுறவு வணிகம்
2) கூட்டுறவு வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
3) பங்குடைமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
4) பங்குடைமை வணிகம், தனியுடைமை வணிகம்